**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.146/2020**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 5 |
| Name (திரு/திருமதி) | : ராஜேஷ்குமார் |
| Father's Name/ Husband's Name | : ராஜகோபால் |
| Village & Taluk | : செஞ்சி |
| Calling | : கூலி |
| Age | : 36 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.05.2026**

1 ம் எதிரி ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

1. அ.சா.1 ராஜவேந்தன் என்பவரை எனக்கு தெரியும். இவ்வழக்கின் 1 ம் எதிரி மணிகண்டன் என்பவரை எனக்கு தெரியும். கடந்த 2019 ம் வருடம்ட ஒரு நாள் செஞ்சி – விழுப்புரம் ரோட்டில் உள்ள டீக்கடையில் டீ மாஸ்டர் குமார் என்பவர் இருந்தார். அப்போது சண்டை நடந்ததாக பேசிக்கொண்டார்கள் யார் என்று எனக்கு தெரியாது. சண்டையை நான் நேரில் பார்க்கவில்லை. காவலர்கள் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1ம் எதிரி மணிகண்டன் என்பவரை எனக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். நான் செஞ்சி – விழுப்புரம் ரோட்டில் டீக்கடை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். கடந்த 08.02.2020 ம் தேதி மதியம் 03.00 மணியளவில் ராஜவேந்தன் என்பவர் என்னுடைய கடையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார் என்றால்

சரிதான். அப்போது இவ்வழக்கின் எதிரிகள் முன் விரோதத்தில் அ.சா.1 ராஜவேந்தன் யை தகாத வார்த்தைகளால் திட்டி, கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் நடந்த சம்பவத்தை நேரில் பார்த்ததாக காவலர்கள் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை என குறிப்பிடப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.